[1981 ஜனவரி 27

கம்பம் மற்றும் கூடலூர் மருத்துவமனைகளுக்கு மின் வசதி

*வினா எண். 54— திரு. ஆர். டி. கோபாலன், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம், கூடலூர் ஆகிய நகரங்களில் உள்ள அரசினர் மருத்துவமனைகளில் உள்ள பிரசவ வார்டுகளில் மின்சார விளக்கு இல்லாமல் அரிக்கன் விளக்குகள் வைத்து பிரசவம் பார்க்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) கம்பம், கூடலூர் ஆகிய நகரங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் உள்ள பிரசவ வார்டுகளில் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசினர் மருத்துவ மனையில் பிரசவ வார்டில் மின் விளக்குகள் அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகிற நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் வயரிங் சரியாக இல்லாததுதான். ஆகவே, அங்கே புதிதாக வயரிங் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கம்பம் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் பிரசவ வார்டில் டியூப் லைட்ஸ் குழாய் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன—அதற்கு, லோட் கொஞ்சம் குறைந்துவிட்டால் மீண்டும் '' ஆன் '' செய்வது கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தினால் அதை மாற்றி ஆர்டினரி லைட்ஸ்—சாதாரண பல்புகள்—போடப்பட்டிருக்கின்றன. இப்போது அங்கே அந்தப் பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கோபாலன் சொன்னது போல் அங்கே டெம்பரரி மின் இணைப்புத்தான் இருக்கிறது. அதை பெர்மனன்ட் மின் இணைப்பாக ஆக்கிக் கொடுக்க முன்வருவார்களா ? திடீரென்று விளக்குகள் அணைந்துவிடுவதால் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு சிரமப்படுகிறார்கள். திருஞானசம்பந்தர்

1981 ஜனவரி 27]

குழந்தையாக இருக்கிறபோது பார்வதி வந்து பால் கொடுத்ததாக எல்லாம் இருக்கிறது. ஆகவே, அந்த மருத்துவமனையிலே உள்ள நிலைமையை மாற்றி நிரந்தரமாக மின் இணைப்புக் கொடுக்கிற வகையில் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரம் இல்லாத காலத்திலிருந்து அதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது (சிரிப்பு).

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் இருக்கின்ற இடங்களிலே கூட மின் தடை திடீர் திடீரென்று ஏற்படுகிற காரணத்தினால் பிரசவ வார்டுகளிலேயும், ஆப்பரேஷன் தியேட்டர்களிலேயும் கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எமர்ஜன்ஸி லைட்கள் இல்லாத பல மருத்துவ மனைகள் இருக்கின்றன, ஆகவே, அமைச்சர் அவர்கள் அங்கேயெல்லாம் எமர்ஜன்ஸி லைட்டுகளைப் பொருத்த உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. பல இடங்களிலே பேட்டரி பொருத்தப்பட்ட எமர்ஜன்ஸி லைட்டுகள் வைக்க படிப்படியாக உத்திரவுகள் போட்டுக்கொண்டு இருக்கின்றோம். இந்த யோசனை ஏற்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கம்பம், கூடலூர் ஆகிய இடங்களில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் பெரிய நகரங்களிலே உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளிலே கூட மின் தடை காரணமாக பல அலுவல்கள் தடைப்பட்டுப்போகிற காரணத்தினால் அந்த ஆஸ்பத்திரிகளிலே எல்லாம் ஜெனரேட்டர்கள் வசதி ஏற்படுத்திக் கொடுத்து மக்களுக்கு உதவி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஆண்டுதோறும், 5, 6 பெரிய மாவட்ட மருத்துவ மனைகளிலே ஜெனரேட்டர் வைத்துக்கொண்டு வருகிறோம். பார்ட் 2 ஸ்கீமிலே கூட நீங்கள் விரைவிலே பார்க்கப் போகிறீர்கள். நாம் அதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, கம்பம், கூடலூர் மருத்துவமனைகளிலே விளக்குகளுக்கு மின் தடை ஏற்பட்டது மாற்றப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் நேரில் போய் பார்த்து இருக்கிறேன். எனக்குக் கொடுத்த தகவலின்படி அங்கே தண்ணீர் வசதி கூட இல்லை, பிரசவம் முடிந்த உடனே முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர்தான். ஆனால், அங்கே தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த நிலைமை அரசுக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

[1981 ஜனவரி 27]

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே : கம்பம் மருத்துவ மனையிலே கிணறு இருக்கிறது. அங்கே பம்புசெட்டு கொண்டு வந்து அதற்குமின் இணைப்புக் கொடுத்து அங்கே ஓவர்ஹெட் டாங்க் அமைக்கப்பட்டு வருகிறது. உண்மை அதுதான். அதற்கான உத்திரவுகள் போடப்பட்டு இருக்கின்றன. அதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது ; தலைவரவர்களே, ஜெனரேட்டர் போன்றவைகளைப் பொதுமக்கள் வாங்கிக் கொடுத்தாலும் கூட அந்த மருத்துவமனையில் இருக்கின்ற அதிகாரிகள் அதைத் தேவைப்படுகிறபோது ஓட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இதுபற்றி அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு டாக்டர். எச். வி ஹண்டே : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கே ஏற்பட்டாலும் கூட அதுபற்றிய செய்திகளை உடனடியாகத் தர வேண்டுமென்பதற்காக நாம் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம். மாவட்ட மருத்துவ அதிகாரிகள்—டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர்கள்—புதிய முறையைக் கையாளும் விதத்தில் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், என்னென்ன வேண்டி இருக்கின்றன என்பதைப் பற்றி ஒரு காப்பியை செக்ரட்டரிக்கும், ஒரு காப்பியை டி.எம்.எஸ்.-க்கும் கொடுக்க வேண்டுமென்று கட்டாயமாகச் சொல்லியிருக்கிறோம் இதன் விளைவாக எங்கெங்கு எப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, குடந்தை அரசு மருத்துமனையில் ரோட்டரி சங்கத்தின் மூலமாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பத்திற்கும், குடந்தைக்கும் ரொம்ப தூரம்?

1981 ஜனவரி 27]

திரு. இரா. தர்மரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, கம்பம், கூடலூர் ஆகிய நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் பி.டபிள்யூ.டி-க்குச் சொந்தமான கட்டிடங்களில் இருக்கின்றன. அடிக்கடி இப்படிப்பட்ட ரிப்பேர்கள் ஏற்படுவதால் நானும் நண்பர் திரு.கோபாலன் அவர்களும் மனுக்களை எடுத்துக் கொண்டு, தபால்காரர் போல ஒவ்வொரு ஆபீசுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. சிறிய பிரச்சினையாக உள்ள இது பெரிய பிரச்சினையாக ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பி.டபிள்யூ.டி-க்குச் சொந்தமான கட்டிடத்தை ஹெல்த் டிபார்ட்மென்டே ஏற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், பராமரிப்பை பி.டபிள்யூ.டி-யிலேதான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர்கள் செல்லும் நேரத்தில் எங்கெங்கு கோளாறு இருக்கிறதோ அதைப்பற்றி கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க நமக்குத் தகவல் கொடுத்தவுடனே அங்கே உள்ள பி.டபிள்யூ.டி. நண்பர்கள் உடனடியாக வேலை செய்யவில்லை என்றால் செக்ரட்டேரியட் மூலம் உத்தரவு போட செளகரியமாக இருக்கும். என்னென்ன பழுது பார்க்க வேண்டுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவலாகக் கொடுக்க விரும்புகிறேன்.

ஹோமியோபதி டாக்டர்கள்.

*வினா எண் 55—**திரு. கே. நாராயணசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1971–72 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) படித்த ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழ்நாடு ஹோமியோபதி மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருத்துவர்களின் சட்டம் 1972-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் முதல் அமலுக்கு வந்தது. எனவே 1971–72-ம் ஆண்டில் ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சிக்காக வரவு-செலவுத் திட்டத்தில் தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை.